ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**10.03.2024**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 9 ஆயிரத்து 811 கோடி ரூபாய் மதிப்பிலான 15 புதிய விமான முனைய திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்

2. இந்தியாவுடன் 100 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தக ஒப்பந்தத்தில் ஐரோப்பிய தடையற்ற வர்த்தக அமைப்பு கையெழுத்திட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்

3. தமிழகத்தில் பல்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க பிரதமர் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக மத்திய ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

4. போதை பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்

5. **பிரென்ஞ்ச் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர்** இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை தைவான் இணையை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான நடவடிக்கைகள்** முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்

உத்தரபிரதேச மாநிலம் **ஆஸம்கடில்** 34 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசிய பிரதமர், இளையோர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி வசதியை அதிகரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

நகர்ப்புற மயமாக்கலை ஒரு நல்வாய்ப்பாக பயன்படுத்தி கட்டமைப்பு பணிகள் நவீனப்படுத்தப் படுவதாக கூறிய அவர், சிவில் விமான போக்குவரத்து, சாலை, ரயில்வே, உட்பட நாட்டின் உள்கட்டமைப்பு நவீனப்படுத்தப்படுவதால் வளர்ச்சி உறுதிசெய்யப் படுவதாக தெரிவித்தார்.

இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் ரயில்வே, நவீன குடியிருப்புகள், கழிவுநீர் மேலாண்மை கட்டுமானம் உள்ளிட்ட 42 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களையும் பிரதமர் துவக்கி வைக்கிறார்

9 ஆயிரத்து 811 கோடி ரூபாய் மதிப்பில், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 13 புதிய விமான முனையங்களுக்கும் இந்நிகழ்ச்சியில் பிரதமர் காணொலி மூலம் அடிக்கல் நாட்டுகிறார்

**நாடுமுழுவதும் 3 ஆயிரத்து 700 கோடிரூபாய்** மதிப்பில் மேம்படுத்தப்பட்ட 744 ஊரக சாலை திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

**தொடர்ந்து சட்டீஸ்கட் மாநிலத்தில், மஹதாரி** வந்தன் **யோஜனா** திட்டத்தின்கீழ் தகுதியுடைய 70 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

நாட்டின் பாதுகாப்பில் மத்திய தொழிலக பாதுகாப்பு படையினர் திறம்பட செயலாற்றுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மத்திய தொழிலக பாதுகாப்பு படையின் 55-வது நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி சமூக வலைதளப்பதிவில் இவர்களின் வீரதீரம் நாட்டுப்பற்று மிகுந்த நடவடிக்கைகளால் இக்கட்டான சூழ்நிலைகளிலும் தேச பாதுகாப்பு உறுதிசெய்யப் படுவதாக கூறினார்.

இதன்மூலம் வளர்ச்சி நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ள முடிவதாக தெரிவித்த அமைச்சர்
தேச பாதுகாப்பிற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு தலைவணங்குவதாக கூறினார்

❖❖❖❖❖❖❖❖❖❖

**பியூஷ்கோயல்**

இந்தியாவில் பல்வேறு துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க ஐரோப்பிய நாடுகள் 100 பில்லியன் டாலர் முதலீட்டை மேற்கொள்ளும் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்

ஐரோப்பிய தடையற்ற வர்த்தக அமைப்புடன் வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு உள்ளதாக கூறிய அமைச்சர், இதன்மூலம் நாடுகளுக்கு இடையேயான நம்பகத்தன்மை அதிகரித்து திறன் சார்ந்த ஒத்துழைப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

**ருசிரா காம்போஜ்**

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் மாற்றங்களை விரைந்து மேற்கொள்வதன் அவசியத்தை
ஐ.நா-விற்கான இந்திய தூதர் திருமதி **ருசிரா காம்போஜ்** வலியுறுத்தி உள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சீரமைப்பு தொடர்பான 78-வது கூட்டத்தில் உரையாற்றிய அவர், வெறும் மாற்றங்கள் மட்டுமல்லாமல், **வீட்டோ** அதிகாரத்தில் தளர்வு உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கும் வகை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

**இந்தியாவில் தயாரிப்போம்**

உலக அளவில் செல்போன் உற்பத்தியில் இரண்டாவது பெரியநாடாக இந்தியா திகழ்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் கடந்த 10 ஆண்டுகளில், 20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உற்பத்தி நடைபெற்றதாகவும், நாட்டில் விற்பனையாகும் 97 சதவிகித செல்போன்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**வலிமையான பாரதம்! வளர்ச்சி அடைந்த பாரதம்** தொடர்பான தங்கள் கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிக்க வேண்டுமென மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடில் பி.ஜே.பி. தேர்தல் அலுவலகத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு நாட்டின் நலன் மற்றும் வளர்ச்சியில் உரிய கவனம் செலுத்துவதாக கூறினார்

தமிழகத்தில் பல்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க பிரதமர் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக கூறிய அமைச்சர் இதனொரு பகுதியாக இளைஞர்கள், தொழிலாளர்கள், மகளிர் உட்பட அனைத்து தரப்பு மக்களின் கருத்துக்களையும் அரசு பரிசீலிப்பதாக கூறினார்.

முன்னதாக திருச்செங்கோடு பேருந்து நிலையம் அருகே உள்ள தினசரி காய்கனி சந்தையில் அமைக்கப்பட்டுள்ள பிரதமரின் கருத்துக்கேட்பு முகாமையும் அமைச்சர் பார்வையிட்டார்

❖❖❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர் நிவாரணம்**

**மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி - நத்தம்** சாலையில் நேற்று நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கு 25 லட்ச ரூபாய் நிவாரணத்தொகை வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு தமது ஆழ்ந்த தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் பட்டு வளர்ச்சிப் பணிகளை** ஊக்குவிக்கும் வகையில் சிறப்பாக பணியாற்றிய பட்டு விவசாயிகள், நூற்பாளர்கள், விதைகூடு உற்பத்தியாளர்கள் 12 பேருக்கு 9 லட்சம் ரூபாய் பரிசு தொகைக்கான காசோலையை முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

**ரகுபதி**

தமிழ்நாட்டில் போதை பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழும் என தெரிவித்தார்

❖❖❖❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

சென்னை கன்னிகாபுரம் விளையாட்டு திடல் மேம்பாட்டு பணிகளை மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று தொடங்கிவைத்தார்

15 கோடியே 15 லட்ச ரூபாய் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கூறினார்

❖❖❖❖❖❖❖❖❖❖

**மக்களவை தேர்தல் விழிப்புணர்வு**

மக்களவை தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது

இதனொரு பகுதியாக தென்காசியில் வாக்களிப்பதன் அவசியம் தொடர்பான விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை ஆட்சித்தலைவர் திரு. கமல் கிஷோர் தொடங்கிவைத்தார்.

இதில் ஏராளமான பள்ளி கல்லூரி மாணாக்கர் கலந்து கொண்டனர்.

முதல் தலைமுறை வாக்காளர்கள் உட்பட அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென தேனியை சேர்ந்த கல்லூரி மாணவிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்

❖❖❖❖❖❖❖❖❖❖

**தண்ணீர் திறப்பு**

**ஈரோடு மாவட்டம் வரட்டுப்பள்ளம்** அணையிலிருந்து புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖❖❖❖❖

ரயில்

கோவை – பெங்களூரு இடையேயான உதய் 2 அடுக்கு அதிவேக விரைவு ரயில் இன்றுமுதல் திருப்பத்தூர் ரயில் நிலையத்தில் நின்று செல்கிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

**புதுக்கோட்டையில் தமிழக அரசின் சாதனைகள்** மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பான புகைப்பட கண்காட்சி நாளை தொடங்கி வரும் 17-ம் தேதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. மெர்சிரம்யா கூறினார்

பொதுமக்கள், மாணாக்கர் உட்பட அனைவரும் இந்த கண்காட்சியை பார்வையிட்டு நலத்திட்டங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

**கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டத்தில்** உள்ள ரெட்டிப்பாளையம், எலசெட்டி, தர்காதொட்டி, உபராண்டபள்ளி உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் காட்டுயானை நடமாட்டம் உள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட வனஅலுவலர் எச்சரித்துள்ளார்.

**வரும் மக்களவை தேர்தல் பாதுகாப்பு பணியில்** ஈடுபட விருப்பமுள்ள சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் ராணுவத்தினர் தங்களது பெயரை முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் பதிவுசெய்யலாம் என ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

**நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் துவங்க** உள்ள நிலையில் விடுமுறை நாளான இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்

❖❖❖❖❖❖❖❖❖❖

உள்ளூர் விடுமுறை

**பிரசித்தி பெற்ற திருவாரூர் ஆழித்தேர் திருவிழா** வரும் 21-ம் தேதி நடைபெறுவதை முன்னிட்டு மாவட்டத்திற்கு அன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு வழக்கம்போல் நடைபெறும் என ஆட்சித்தலைவர் திருமதி. சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டை மாவட்டம் திருவப்பூர்** முத்துமாரியம்மன் கோவில் தேரோட்டம் நாளை நடைபெறுவதை ஒட்டி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது

இதன்காரணமாக நாளை நடைபெற இருந்த பொதுமக்கள் குறைதீர்நாள் கூட்டம் ரத்து செய்யப்படுவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

**சமயபுரம்**

**திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன்** திருக்கோவில் பூச்சொரிதல் விழா இன்று தொடங்குகிறது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் மல்லிகை பிச்சிப்பூ உள்ளிட்ட பல்வேறு வகையான மலர்களை பாதயாத்திரையாக கொண்டு சென்று அம்மனை வழிபடுவர்.

மாவட்ட நிர்வாகம் சார்பில் பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**பிரென்ஞ்ச் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர்** இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை தைவானின் **யங் போஹான் லி யூ** இணையை எதிர்கொள்கிறது

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ச்சிராக்ஷெட்டி இணை - தென்கொரிய இணையை 21-13, 21-16 என்ற செட்களில் வென்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

**மகளிர் கிரிக்கெட்**

**டெல்லியில் நடைபெறும் மகளிர் பிரிமியர் லீக்** கிரிக்கெட் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - டெல்லி கேபிட்டல்ஸை இன்று எதிர்கொள்கிறது

❖❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**